**மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**இரண்டாம் தவணைப் மதிப்பீடு - 2019**

# தமிழ் இலக்கிய நயம்

**தரம் :-11** விடைகள்

## பகுதி-1

01.

i.(அ) கடிதம் /அஞ்சல் / காயிதம் / திருமுகம் / தபால்

(ஆ) வறுமை பஞ்ச நிலை

ii.(அ)இயேசு கிறிஸ்து எமை எவ்வித துன்பமும் வந்தணுகாது ஒவ்வோரு நாளும் காப்பாற்றுவார்.

(ஆ) பாரதியார்

iii.(அ) வீமன் / வீமராஜன் / விதர்ப்பநாட்டரசன்

(ஆ) தமயந்திக்கு

iv.(அ) மகவு - சோழநாடு

தாய் - காவேரி

(ஆ) மகவுக்கு வேண்டியனவற்றைச் செய்து மகவு செம்மையாக வாழ வழிவகுப்பவள் தாய். அதுபோல காவேரி நதி சோழ நாட்டினை வளப்படுத்தி அங்கு மக்கள் வளத்துடன் வாழ உதவுகின்றது.

v.(அ) வண்ணத்துப்பூச்சி அழகானவை

(ஆ) வண்ணத்துப்பூச்சி போலத் தோற்றம் அளிக்கிறது. ஆனால் பூக்கள் கிளையிலிருந்து உதிர, வண்ணத்துப்பூச்சியானது கிளையை நோக்கிச் செல்கின்றது. உதிர்ந்த பூ ஒன்று கிளையை நோக்கித் திரும்புவதாக கவிஞர் அதனை விபரிக்கின்றார். ஆழகான பொருட்கள் அழியும் ஆனால் அழகு அழியாது. அழகான சொரிப்பூ வாடி விழுகிறது. பூவைப் போன்ற வண்ணத்துப்பூச்சி அதனிடத்தை நிரப்புகின்றது. ஒரு பொருள் அழிய அடுத்த பொருளுக்குப் பிரதியீடாக அழகு தொடர்ந்து நிலைக்கிறது.

(4 X 5 = 20 புள்ளிகள்)

02.

(i) உழவர் ஓதை – உழவர்கள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கும் ஏர் மங்கல ஓசை.

மதகு ஓதை – நீர் மதகினூடாகச் செல்வதால் உண்டாகும் ஓசை.

உடைநீர் ஓதை – கரைகளையும், வரப்புகளையும் உடைத்துப் பாய்கின்ற நீரின் ஓசை.

(ii) சோழ மன்னனின் ஆட்சிச் சிறப்பே ஆகும்.

(iii) உருவக அணி (காவேரியாற்றைப் பெண்ணாக உருவகித்துச் சிறப்பிக்கின்றார்)

(iv) கோவலன்

(V) ஓதை – ஒசை, ஏர் - கலப்பை, விழவர் - மக்கள், ஆர்ப்ப – ஒலிக்க, புனல் - நீர்

(5X 5 = 25 புள்ளிகள்)

## பகுதி II

03.

(1) காவற்பெண்டு கண்ணகியை வணங்காமைக்கான காரணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

(2) காவற்பெண்டு, கண்ணகி சிறு பிள்ளையாக இருந்த நாள் முதல் அவளை பராமரித்து வளர்த்து அவளின் சுகதுக்கம் எல்லாம் அறிந்தவள் ஆதலாள்.

(3) கண்ணகியை

(4) காவற்பெண்டால்

(5) காவற்பெண்டு கண்ணகியை சிறு பராயத்திலிருந்து தூக்கி வளர்த்தவள் ஆதலால், வயிற்றில் உதிக்காவிட்டாலும் அவள் தன் மகள் தன் மடியில் தவழ்ந்தவள் என்பதால். அவளை தெய்வமெனத் தொழுதால் அவள் அனுபவித்த கொடுமைகளை மூடி மறைத்தவளாகுவேன் என்பதற்காக.

(5X 5 = 25 புள்ளிகள்)

## பகுதி III

04.

(i) <u>மனித சுயநலம்</u>

கன்றுக் குட்டிக்கு கழுத்துச் சங்கிலி, வாய்ப்பூட்டானகூடை என்பனவற்றைப் போட்டு அதைப் பால் குடிக்க விடாது தடுத்தல். பால் சுரக்கும் நேரத்தில் கன்றை இழுத்துக் கட்டுதல் மாடசாமிக்கும் பால்காரனுக்கும் இடையில் நடந்த உரையாடல் மூலம் “கிடாரிக் கண்ணுக் குட்டியாக இருந்தாலும் பரவாயில்லை வளர்த்தாலும் நாளைக்கு பால் கொடுக்கும், நல்ல விலைக்குக் கேட்டால் கொடுத்திடலாம்”. “ஒரு நாளைக்கு இதுவே ஒரு படி பாலைக் குடிச்சிடும்?”. “மனிதர்களையும் சரி மிருகங்களையும் சரி வயிற்றில் அடித்துப் பட்டினி போட்டு அணு அணுவாகக் கொன்றால் அதைத் தடுப்பதற்கு சட்டம் இல்லை ”. கன்றுக் குட்டியை பால் குடிக்க விடாது அதனைச் சாகவிடல் மாடசாமி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குத்த வந்த காளையிடமிருந்து மகனைக் காப்பாற்றாது பின் நின்றமை.

(ii) <u>பசுவின் ஜீவகாருண்யம்</u>

- தனது கன்றை போலவே எஜமானின் மகனையும் நாக்கால் தடவுதல்.
- கன்றுக்குட்டி பாலில்லாது தவிப்பதைப் பார்த்து வேதனை தாங்காது தவிர்த்தல்.
- வைக்கோலை அடைத்த பொம்மைக் கன்றுக்குட்டியைக் கண்டதும் பசுவின் மடியில் பால் சுரத்தல்.
- காளை மாடு குமரனைத் தாக்க முன் கயிற்றை அறுத்துக்கொண்டு போய் குமரனுக்கும், காளைக்கும் இடையில் நின்று பாதுகாத்தல் காளை மாட்டைக் கடிந்து கொள்ளல்.

(15 புள்ளிகள்)

05. ஹைக்கூக் கவிதைகளுக்கூடாகக் பாடநுலைத் துணைக்கொள்க.

(15 புள்ளிகள்)

06.

- மக்களுக்காகச் சமகால பல விடயங்களை நாடகப்பிரதி மூலம் ஆசிரியர் மறுவாசிப்பு செய்ய முயலுகின்றனர்.
- அக்காலத்தில் பெண்கள் வஞ்சிக்கப்பட்டமையின் கொடுமையினைக் கூறவிழைகின்றார்.
- அன்றைய பெண் சமூகத்தின் யதார்த்தத்தினை (உண்மை நிலையை) வெளிக்கொண்டு வர எம்மை உணரவைக்க முயலுகின்றார்.

(15 புள்ளிகள்)

07.

(i) <u>தோற்றம்</u>

கணவனை இழந்ததால் பொலிவற்றுக் காணப்பட்டமை . நறுமணங் கமழும் நீண்ட கூந்தலை உடையவளாகக் காணப்பட்டமை.

ஆழகிய தோள்களும் நீண்ட கண்களும் உடையவளாகக் காணப்பட்டமை.

வெண்மையான முழுநிலவும் பகல் பொழுதில் ஒளிகுறைந்து காணப்படுவது போலக் காணப்பட்டமை.

திருமாங்கல்யக் கயிற்றை நீக்கி பிறமணி ஆபரணங்களை அணியாமல், மலர் மாலைகளை அணியாமல், குங்குமம் சந்தணக் குழம்புகளைப் பூசாமல் தனங்களைப் பாக்கு மரம் போன்று கழுத்தோடு சேர்த்து மேலாடையால் போர்த்து மூடிக்கொண்டு நின்றமை.

(ii) <u>மதிநுட்பத்துடன் கூடிய சொல்வன்மை.</u>

வீரனே அளவில்லாத காலம் தவம் செய்தால் மட்டுமே உன் வருகை தேவர்களுக்கு வாய்க்கும் என்று கூறியமை.

“ உன் பாதங்கள் எங்கள் இருப்பிடத்தில் பட்டதால் இனிது வாழப்பெற்றவர்களானோம்” எனக் கூறியமை. துன்பம் தீர்ந்து நற்கதி பெற்றவர்களானோம் எனக்கூறியமை. “இராம பிரானைப் பிரியாமல் வாழ்பவன்” என இராமனை நினைவூட்டி, கோபத்தைத் தணிவித்தமை.

வானரங்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனக் கூறி இலக்குவனது வீரத்தைப் புகழ்ந்தமை.

வானர வீரர்களை உன்னவர்கள் எனக் கூறியமை.

(15 புள்ளிகள்)